namnaa15:namnaadhu 16/08/2010 12:39 AM Page 31



# நீதிபதி இளஞ்செழியனுக்கு, வேலணை கிழக்கு பழைய மாணவர் சங்கமும் மக்களும் இணைந்து எடுத்த பாராட்டு விழா

வேலணை மண்ணின் மைந்தரும், கல்விமானும் நீதவானுமாகிய மாணிக்கவாசகர் இளஞ்செழியனுக்குப் பாராட்டு விழா ஒன்று ஸ்காபரோ வார்டன் வீதியில் அமைந்துள்ள சுவையகம் மண்டபத்தில் நடைபெற்றது.

வேலணை கிழக்கு, மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு, வேலணை மக்களால் எடுக்கப்பட்ட இவ்விழாவில், இளஞ்செழியன் அவர்களை பல வருடங்களுக்குப் பிறகு சந்தித்த உணர்வுகலந்த ஒரு பொழுதாக அமைந்து கொண்டது.

சங்கத் தலைவர் கனகரட்ணம் இதயராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் இளஞ்செழியனுக்கு ஊர்மக்களால் சமூக சேவைப் பாரா ட்டுப் பத்திரம் வழங்கியும் பொன்னா டை போர்த்தியும் கௌரவித்தார்கள்.

நன்றியுரை வழங்கும் போது நீதிபதி மா.இளஞ்செழியன், ஒன்றாக வளர்ந்த கிராமம், உறவினர், நண்பர்கள், பாடசலை மாணவர்கள் மத்தியில் தான் நிற்கும் பொழுது அளவில்லா மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டார்.

திரு இளஞ்செழியன் அவர்களும், திருமதி இளஞ்செழியன் அவர்களும் ஊரார் கூடி மகிழ்ந்த இவ் விழா என்றும் அவர்களது மனதில் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விழாவில் எடுக்கப் ட்ட சில படங்களை இங்கே காண் கிறீர்கள்.

-செய்தியும் படமும் லோகன்

















